**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி – 2019**
**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சிறுகதை மன்னன் என்று புகழப் பெற்றவர் யார்?
2. விடுகதை அமைப்பில் அமையும் பா எது?
3. தளை தட்டிய திருக்குறள் எனப்படுவது யாது?
4. சிலேடை பாடுவதில் வல்லவர் யார்?
5. இந்தியாவில் முதல் நாவல் எது? எழுதியவர் யார்?
6. ஒரே நாளில் கதை தொடங்கி முடிந்த நாவலின் பெயர் என்ன? அந்நாவலை எழுதியவர் யார்?
7. குடும்பச் சிக்கல்களுக்குரிய சிறுகததகளை எழுதுவதில் குறிப்பிடத்தகுந்தவர் யார்? குறிப்பிட்ட சிறுகதையின் பெயர் என்ன?
8. கேதாரியின் தாயார் சிறுகதையின் கருப்பொருள் யாது?
9. பால்வண்ணம் பிள்ளையின் சித்தவுறுதி யாருக்கு இருந்தால் அது பெருங்குணமாகக் கருதப்படும்?
10. தத்துவத்தைப் பற்றி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் கருத்து யாது?
11. சங்க காலத்தின் குறிப்பிடத்தக்க பெண்பாற் புலவர்கள் மூவரின் பெயரைக் கூறுக.
12. நாடகம் எப்பொழுது எழுத்து வடிவில் கிடைத்தது?

13. முதன்முதலில் பெண்களையே வைத்து ஆரம்பிக்கப்பட்ட நாடகக்குழு எது?
14. மனிதன் பெற்ற பெருஞ்செல்வங்களில் ஒன்று – எது?
15. உரைவேந்தர் என்று அழைக்கப்பட்டவர் யார்?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கலிவெண்பாவின் அளவையும் அமைப்பையும் கூறுக.
2. படைப்பிலக்கியம் தோன்றக் காரணம் என்ன?
3. நாவலின் உரைநடை வகைகளைக் கூறுக.
4. பாத்திர முன்மாதிரி என்றால் என்ன?
5. சிறுகதையின் இலக்கண வரம்புகளைக் காட்டிலும் முக்கியமானவையாகக் கருதப்படுபவை யாவை?
6. சிறுகதையின் கருப்பொருள் எங்ஙனம் அமைய வேண்டும்?
7. மனிதநேயத்திற்கு உரிய சிறுகதைகளாகக் குறிப்பிடப்படும் சிறுகதைகள் எத்தனை? அவை யாவை?
8. அண்ணாவின் மொழி நடை குறித்து எழுதுக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நாவலின் தோற்றம், வளர்ச்சி குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறக் கூத்துகள் நாடகமாக வளர்ந்த விதத்தை விளக்குக.

2. (அ) இன்றைய தமிழ் நாவல்கள் சமூகப் பிரச்சனைகளை எவ்வாறு அணுகுகின்றன என்பதை ஆராய்க.

(அல்லது)

(ஆ) இன்றைய எளிமையான உரைநடை வளர்ந்த விதம் குறித்து கட்டுரை தருக.

3. (அ) சிறுகதை பற்றிய கருத்துகளையும் கோட்பாடுகளையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐரோப்பியர்கள் உரைநடைக்கு ஆற்றிய பணிகளைத் தொகுத்துரைக்க.

***